# வள்ளுவர் வகுத்த கல்விக்கொள்கை

**அ. தமிழரசி**

திருக்குறள் மிகச் சிறந்ததொரு அற இலக்கியம். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளின் மேன்மையினை விளக்கும் உயர்ந்த நூல். அதனாலேயே எல்லாப் பொருளும் இதன் பாலும், இதன் கண் இல்லாத எப்பொருளும் இல்லையென மகிழ்ந்து போற்றுகிறோம். இந்நூல் எத்திறத்தவர்க்கும் அத்திறத்ததாய் அறம் கூறும் அரிய தன்மை உடையதாகையால் இன்று வரை இதற்குப் புதிய உரைகளும், ஆராய்ச்சி நூல்களும் வந்தவண்ணம் உள்ளன. இந்நூல் தமிழர்களின் தனிப் பெரும் கருத்துக் கருவூலம். அனைவருக்கும் எளிதில் பொருள் உணரும் வகையிலும், அறிஞர்களுக்கு ஆராய, ஆராயப் புதுப் பொருள்களைப் புதைபொருளாக்கிக் கொண்டு விளங்கும் மேன்மைமிக்கது. திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல். மனிதனாகப் பிறந்து, மனிதனாக வாழ்ந்து, மனிதனாக மடிவதில் மட்டும் இல்லை சிறப்பு. மீண்டும் அவன் உயிர் பெற்று ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு திருவள்ளுவரைப் போல் வாழ்வது தான் வாழ்வாங்கு வாழ்தலாகும். அதற்குரிய வழிகள் அனைத்தும் வள்ளுவத்தில் கூறப்படுவதாலேயே இரண்டாயிரம் ஆண்டுகளாக நின்று நிலவுகிறது. இதன்பாலுள்ள நெறிகளைக் கற்றலும், கடைப்பிடித்தலும், மற்றவர்க்கு எடுத்துரைத்தலும், போற்றலும், ஒவ்வொரு தமிழனின் உயர் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

திருக்குறள் ஒரு தெய்வ நூல். திருவள்ளுவர் ஒப்பற்ற தெய்வப் புலவர். திருக்குறள் தமிழர் நாகரிகத்தைக் கூறும் தலைசிறந்த நூல். திருக்குறள் உலகெலாம் ஒப்பும் உயர்ந்த நூல்.

கல்வியின் சிறப்பினைக் கடவுள் வாழ்த்திலிருந்தே தொடங்குகிறார் திருவள்ளுவர்.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” (குறள்-1)

கற்றதன் பயனையும் இங்கேயே அடுத்த குறளில் கூறுகிறார்,

“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழஅர் எனின்” (குறள்-2)

‘கல்வி’ என்ற அதிகாரம் தனித்திருந்தாலும், நூல் முழுவதும் அத்தகைய கருத்துகள் நிரம்பி இருந்தாலும் முதல் குறளிலேயே எழுத்தைப் பற்றிய சிந்தனையும், அடுத்த குறளிலேயே அதன் பயன் யாது எனச் சிந்திக்கும் திறனும் வள்ளுவரின் உள்ள உயர்வையும், தெளிவையும், கல்வி பற்றிய அவரது சிந்தனையும் நம்மை இங்கே சிந்திக்க வைக்கிறது.

வள்ளுவர் கூறும் அனைத்து அறங்களுக்கும் அன்பு அடிப்படையாக அமைவது போல் அறிவு மற்றைய அனைத்திற்குமே தேவைப்படுகிறது. கல்வியால் ஒருவன் ஆறாவது பயனையும் முழுமையாக உணரப் பெறுகிறான்.

அறிவின் துணையால் இவ்வுலக வாழ்வின் அத்துணை நன்மைகளையும் முழுமையாக அடைவான்.

சிறந்த படிப்பாளிகளால் தான் சிறந்த படைப்பாளயிாகவும் விளங்க இயலும் என்பது நடைமுறை உண்மை. அந்தப் படிப்பு நூல் வழியாகவும் கிடைக்கும் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்குவதன் மூலமும் கிடைக்கும். திருவள்ளுவர் முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றும் பண்பாளர் என்பதும், அவர் குறள்களின் வழியே ‘என்ப’, ‘மொழிப’, ‘கூறு’ என்று கூறுகிறார். அவரே

‘பெறுமவற்றுள் யாமறி வதில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற’

என்று கூறுவதால் ‘அறிவார்ந்த’ மக்கட்பேற்றினையே என்பதை அழுத்தமாகவே கூறுகிறார்.

கல்வியின் பெருமையைப் பலவாறாக நூல்கள் கூறுகின்றன. ஒருவன் உடலழகு சிறந்தவனாக இருப்பினும், நூல்களைக் கற்ற கல்வியழகு இல்லையெனில் அவனது புற அழகால் சிறப்பேதும் இல்லை. புறஅழகு பெற்ற ஒருவன் கல்வியறிவும்

பெற்று விட்டால் பொன்மலர் நாற்றம் பெற்ற பெருமை உடையதாகும் என்றுரைக்கின்றனர்.

"மயிர்வனப்பும் கண்கவரும் மார்பிள் வனப்பும்
உகிர் வனப்பும் காதின்வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்குஇயைந்த
சொல்லின் வனப்பே வனப்பு"

என்று சிறுபஞ்சமூலப்பாடலும்,

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"

என்று நாலடியார் பாடலும்,

'கற்றோர்க்குக் கல்வி நலனே நலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகு செய் வார்'.

என்று நீதிநெறி விளக்கமும் கூறுகின்றன. இப்பாடல்களால் கல்வி அழகே அழகு என்ற உணர முடிகிறது.

இத்தகைய கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியன், கற்றும் மாணவன், ஆகியோர்க்கு இலக்கணம் கூறுகிறது நன்னூல் என்னும் இலக்கண நூல்.

'அன்னம் ஆவே; மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னார் தலை, இடை கடை மாணாக்கர்'

அன்னம் நீரையும் பாலையும் கலந்துவைத்திருந்தால் பாலை மட்டும் உண்ணுதல் போல தலை மாணாக்கர் ஆசிரியர் கூறும் நல்ல கருத்துகளையே எடுத்துக் கொள்வர்.

பசுவானது கிடைக்கும் போது அமைதியாக உண்டு பின்பு அசை போடும் இயல்புடையது. அதைப்போல் தலை மாணாக்கர் ஆசிரியர் கூறும்போது கேட்கும்பின்பு கேட்ட பாடங்களைத் திரும்பவும் நினைவுகூர்ந்து உணர்ந்து செம்மையாகத் தெளிவர்.

நிலத்தையும், கிளியையும் போது அமைதியாக உண்டு பின்பு அசை போடும் இயல்புடையது. அதைப்போல் தலை மாணாக்கர் ஆசிரியர் கூறும்போது கேட்ட பாடங்களைத் திரும்பவும் நினைவுகூர்ந்து உணர்ந்து செம்மையாகத் தெளிவர்.

நிலத்தையும், கிளியையும் போல்வர் இடை மாணக்கர். நிலம் உழவனின் உழைப்பிற்கேற்ப விளைச்சல் தரும். கிளி சொன்னதையே திருப்பிச் சொல்லும். அதைப்போல் ஆசிரியர் கற்பித்த அளவே கற்றுக்கொள்பவர் இடை மாணாக்கர் ஆவர்.

பொத்தல் குடம், ஆடு, எருமை, நெய்யரி (பன்னாடை) என்னும் நான்கையும் ஒத்தவர்கள் கடைமாணாக்கர் என்கிறது நன்னூல். பொத்தல் குடம் நீரை ஊற்றினால் ஒழுக விட்டு விடும், ஆடு அங்கொன்றும், இங்கொன்றும் தின்னும், எருமை தண்ணீரைக் கண்டால் கலக்கியே குளிக்கும், கலக்கியே குடிக்கும் இயல்பு உடையது. பன்னாடை வடிகட்டும் போது நல்லனவற்றைக் கீழே விட்டு விட்டு ஈ எறும்பு போன்றவற்றையே தக்க வைத்துக் கொள்ளும் என்று விளக்கமாகப் பேசுகிறது நன்னூல்.

மேலும்,

'களிமடி மானி காமி கள்வர்
பிணியன் ஏழை பிணக்கள் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்
தடுமாறு உளத்தன் தறுகணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகறார் நூலே'

என்று கற்கத் தகுதியற்றவர்களையும் அது கூறத் தவறவில்லை.

கல்வியைப் புகட்டும் ஆசிரியன்

"குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை

கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலைமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்
அமைபவர் நூலுரை ஆசிரியன்னே”
என்கிறது நன்னூல்.

ஆசிரியர் ஆகாதவர் யார் யார் எனவும் கூறத் தவறவில்லை.

“மொழி குணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம் அச்ச மாடலும்
கழற்குடம் மடற்பனனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ இலர் ஆசிரிய ராகுதலே”

என்று கூறும் நன்னூல் எவ்வாறு பாடம் கற்பிக்க வேண்டும் என்றும் கூறுகிறது.

“ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடமும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்து அவனுளங் கொளக்
கோட்டமில் மனத்துள் நூல் கொடுத்தல் என்ப”

என்று ஆசிரியர் கற்பிக்கும் முறையையும் தெளிவுபடப்பேசுகிறது.

மாணவன் ஆசிரியரிடத்தில் எவ்வாறு பழக வேண்டும் என்றம் கூறுகிறது.

“அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி
நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு
எத்திறந்து ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தின் திரியாப் படர்ச்சி வழிபாடே”

என்று மாணவர்கள் ஆசிரியர்களை நீங்காது, நெருங்காது நிழலாகத் தொடர்ந்து, ஆசிரியர் மகிழும் வகையில் அறத்தின் மாறாதிருந்து பயிலவேண்டும் என்கிறது.

ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கும் போது மாணவர்கள்

“கோடல் மரபே கூறுங்காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகியவன் குறிப்பிற் சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத்தின் ஆகிச்
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவி வாயாக நெஞ்சு கலனாகக்
கேட்டவை கேட்டு அவை விடாதுளத் தமைத்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லி
போவெனப் போதல் என்மனார் புலவர்”

என்று பாடம் கேட்கும் முறையை

இருவென இருந்து சொல்லெனச் சொல்லி
வோவெனப் போதல் என்மனார் புலவர்”

என்று கூறிய வள்ளுவர் எத்தகைய நிறைமொழியாளர், மறைமொழி மாண்பாளர் என்பதை அவரது மொழிகளாலேயே நாம் உணரலாம். ஒருவன் தன் மக்களுக்குச் செய்ய வேண்டியவை கல்வியில் சிறந்தவன், கற்றோர் அவையில் அவன் முந்தி இருக்கச் செய்வதே என்கிறார். அத்தகைய கல்வியைக் கொடுத்த தந்தைக்கு மகன் செய்யும் நன்மை என்பது இவனை மகனாகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ என்பது தான் என்கிறார். தங்களை விட தம்மக்கள் சிறந்த கல்வியாளராகவும், அறிவுடையவர்களாகவும் அமைய இவ்வுலக உயிர்களுக்கெல்லாம் இனியது என்று கூறுகிறார். ஒரு தாய் தன் மகனைப் பெற்ற பொழுதை விட அவன் சிறந்த அறிவாளன் என்று பிறரால் போற்றப்படுவதைக் கேட்கும் பொழுதே மிகவும் மகிழ்ச்சி கொள்வாள் என்கிறார்.

“தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்” (குறள்-67)

“தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது” (குறள்-68)

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கம் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்” (குறள்-69)

“மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்” (குறள்-70)

திருவள்ளுவர் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும், இவ்வுலகுக்கம் நன்மை தரத்தக்கது கல்வியறிவே என்கிறார். திருக்குறளைப் போலவே வேறு சில பாடல்களும் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கிறது. தன் இளமைக்குக் காரணம் தான் வாழும் நாட்டில் ஆன்றவிந் அடங்கிய கொள்கைச் சான்றோர் வாழ்வதே என்று பிசிராந்தையார் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

“ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே”

கல்வி இவ்வுலகில் அனைத்தையும் அளிக்கும் ஆற்றல் உடையது என்றால் மிகையில்லை.

“இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அளிக்கும் மருந்து”

என்று நாலடியார் கூறுகிறது. கல்வி தான் அஞ்ஞானம் அகற்றி, மெய்ஞ்ஞானச் சுடரை ஏற்றும் விளக்காகும் என்கிறது. கற்ற அறிவுடையவர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும் அந்நாடு வேற்று நாடல்ல. அது அவர்களுக்குச் சொந்த நாடு போல் சிறப்பு நல்கும்.

“ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்று நாடாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவதில்” (பழமொழி)

அரசனையும், அறிவுத்திறன் படைத்தவனையும் எண்ணிப் பார்த்தால் அரசனை விட, அறிவுடையவனே சிறப்புடையவன் என்கிறது பாடல். காரணம், தன் தேசமே அரசனுக்குப் பணியும், அறிவாளனுக்கு எந்த தேசமும் பணியும் பெருமை உடையது என்கிறார்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேச மல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு – (வாக்குண்டாம்)
இதனையே வள்ளுவரும்,
“யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்

சாந்துணையும் கல்லாத வாறு"

என்று கேட்கிறார். ஒருவன் இறக்கும் வரைக் கற்று கல்விச் செல்வத்தை முதலில் சேர்த்து வைத்துக் கொள்ளலாம். கல்வியானது,

வெள்ளத்தால் அழியாது, வெந்தனலால்
வேகாது, வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றாது
கள்ளர்க்கோ பயமில்லை, காவலுக்கு
மிக எளிது"

என்ற வரிகள் கல்விக்கு எவ்வளவு முக்கியம் கொடுத்து எழுதப்பட்டவை என்பதை உணர்ந்து ஒருவன் கற்க முனைதல் வேண்டும் என்ற கொள்ளலாம் ஒருவன் கற்க கற்கவே அவனது அறிவும் வளரும். அதனால் ஒருவன் கற்றலை எப்போதும் தொடர வேண்டும். போதும் என்ற எண்ணம் கல்வியில் ஒருவனுக்குத் தேவையில்லை. காரணம் அவன் கற்க கற்க அறிவுப் பெருக பெருக இவ்வுலகமே அவனுக்குச் சுற்றமாகும். அதனால் சாகும் வரை கற்க வேண்டும் என்ற வள்ளுவர் உறுதியாகக் கூறுகிறார்.

"தொட்டனைத்து தூறும் மனற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு" (குறள்-396)

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள்-397)

"நீரளவே ஆகுமாம் நீராம்பல்; கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" (குறள்- )

என்ற பாடல்வரிகளும் இதனையே கூறுவதால். எல்லோரும் இறக்கும் வரை கற்க விழைதல் வேண்டும். இக்கல்விச் செல்வத்தை ஒருவன் எவ்வளவு வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம். இதற்கு வருமான வரி கிடையாது. சொத்துக் குவிப்பு என்ற குற்றம் இல்லை. அதனால் அவரவர் வாழ்வில் இயன்ற வரை முயன்று எத்துணை பெருமளவிற்கும் சேர்த்துக் கொண்டு புகழ் பெறலாம்.

ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி அவனது ஏழ் பிறவிகளுக்கும் பெருமை கொடுக்கும். மேலும் கல்வியில் பெருமையும் புகழும் பெற்று இவன் மகிழலாம். அக்கல்விப் பொருளைப் பிறருக்கு எடுத்துக் கூறி மற்றவரையும் மகிழ வைக்கலாம். தனக்கும், பிறருக்கும் இன்பம் அளிப்பது கல்வியே.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள்-398)

"தாம்இன் புறவர் உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள்-399)

திருமூலர் திருமந்திரத்தில்

"கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே" என்ற வரியும் இதனையே உறுதிப்படுத்துகிறது.

"கற்பக் கழிமடம் அஃகுடம் மடம் அஃகப்

புற்கம் தீர்ந்து இவ்வுலகின் கோளுணரும்"

என்னும் ப.்.றொடை வெண்பாவாலும்,

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித் திறத்தின் முட்டறுப்பான் ஆகும் மொழித்திறத்தில்
முட்டறுத்த நல்லோன் முதல்நூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்னும் பழைய பாடலாலும் கல்வியால் தான் வீடுபெற முடியும் என்று கூறப்படுவதால் கல்வியின் அவசியம் கூறப்படுகிறது.

மேலும் குமரேச சதகப் பாடல் வரிகளை நாம் இங்கு நினைவில் கொள்வது மிகப் பொருந்தும் என்று நினைக்கிறேன்.

"கனவித்தை கொண்டவர்கள்… காவியம் செய்த மேலார்…
சரீரங்கள் செத்த போதிலும் சாகாத மனிதர் இவர்"

என்கிறது சாகாத பெருவாழ்வு இவ்வுலகில் கொடுப்பது கல்வியே ஆகும். அதனாலேயே சாந்துணையும் கற்க வேண்டும் என்று மொழிகிறார் வள்ளுவர்.

நாம் இன்று வாழ்வில் கல்வி கற்பது பதவியைப் பெறவும், பதவியின் அதிகாரம், அதன் மூலம் பொருட்பெருக்கம், அதன் வழி பெருமை என்று எண்ணிக் கொண்டு கற்று நல்ல பதவி பெற்றுவிட்டால் அதன் பின் நல்ல நூல்களைப் படிப்பது என்ற வழக்கமே இல்லாமல் போய்விட்டது. ஆனால் திருவள்ளுவர்,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும் தன்
உண்மை அறிவே மிகும்" (குறள்-373)

"பேதை படுக்கும் இழவூழ், அறிவகற்றும்
ஆதலூழ் உற்றக் கடை" (குறள்-372)

ஊழின் காரணமாய் ஒருவன் பொருள் இழக்கும் நிலையெனில் அவனது அறிவிழந்த செயல்களே மிகுந்து நிற்கும்.

அதே ஊழால் செல்வம் சேரும் நிலையெனில் அறிவு மிகுந்து அறிவுடைச் செயல்களே மிகுந்து நிற்கும். அதனால் எத்துணை நூல்களைப் பெற்றாலும், கற்றாலும் நுண்ணிய அறிவு பெற்றாலும் அவரவர் ஊழின் வழியே தான் அவரவர் அறிவு செயல்படும் என்கிறார் வள்ளுவப் பேராசான். ஒருவன் கல்வியைக் கட்டாயம் கற்க வேண்டும். அவ்வாறு கற்கும் கல்வியையும் கசடறக் கற்க வேண்டும். மேலும் கற்பனவற்றைத் தேர்ந்து கற்க வேண்டும். அவ்வாறு நல்ல நூல்களைக் கற்றபின். அந்நூற் கருத்துகளுக்கேற்ப நடக்க வேண்டும். அது அவன் கற்ற கல்விக்குப் பெருமை என்கிறார்.

"கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள்-391)

செல்வந்தர்களின் முன் பொருளில்லா ஒருவன் எவ்வாறு ஏங்கி நின்று, பணிந்து அவனிடம் கேட்டுப் பொருளைப் பெற நினைப்பானோ, அதைப் போல கற்றார் முன் பணிந்து நின்று அவரிடம் நூற்கருத்துகளைக் கேட்டறிய வேண்டும்.

“உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றம் கற்றார்
கடையரே கல்லா தவர்” (குறள்-395)

எக்குலத்தில் பிறந்தாலும் கல்விக்குச் சிறப்புண்டு என்று புறநானூற்று அடிகளும் கூறுகின்றன.

“வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே”

என்பதற்கேற்ப திருக்குறளும்,

“மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு”

என்று கூறுகிறது.
நாலடியாரும்,
கடைநிலத்தோ் ஆயினும் கற்றறிந் தோரைத்
தலைநிலைத்து வைக்கப் படும்”
கற்றவனே தலையாக மதிக்கப்படுவான் என்கிறது.

நால்வகைக் குலத்தோருள்ளும் மேற்குடியில் பிறந்து இருந்தாலும் கற்கவில்லையெனில் அவனும் கீழிருப்பவனே” என்றும், எக்குடிபிறந்தாலும், யாராக இருந்தாலும் அக்குடியில் கற்றவர்களையே மேலோர் என்பார்” என்று நறுந்தொகையும் கூறுகிறது.

“நாள்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில் னாயின் கீழிருப் பவனே”

“எக்குடியிற் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பார்”

எனவே ஒருவன் எப்பாடுபட்டேனும் கற்க வேண்டும்.

“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே”

“உள்ள பொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
பொருள் தேடி உழல்கின்றீரே”

என்கிறது ஓர் தனிப்பாடல். இதனையே திருவள்ளுவர்

“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை” (குறள் 400) என்கிறார்.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”, “எண் எழுத்து இகழேல்”

ஔவையார் மனிதனுக்குக் கண்களே கல்வி தான் என்கிறார். திருவள்ளுவரும்,

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள் 392)

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" (குறள் 393)

என்று கூறியுள்ளதை நாம் ஒப்புநோக்கல் நன்றாகும்.

"கற்றறிவாளர் கருத்திலோர் கண்ணுண்டு" என்ற திருமந்திர வரியையும் நினைவுகூர்தல் நன்றாகும்.

ஒருவன் புறப்பார்வைப் பெற்று இருந்தாலும், அகப்பார்வையைத் தரத்தக்கக் கல்வியைப் பெறவில்லையெனில் அப்பார்வை பெற்றவர்களும் புல்லாகவே கொள்ளப் பெறும் என்கிறார் காரணம் கல்வி ஒருவனுக்கு,

அறம், பொருள், இன்பமும், வீடும் பயக்கும்.
"புறங்கடை நல்லிசையும் நாட்டும் உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை"

என்னும் நீதிநெறி விளக்கப் பாடலால் அறியலாம்.

கல்வியின் திறம் உணர்ந்து செம்மாந்த கல்வியாளர் ஆயினும் அடக்கம் உடைமை என்பது அவர்க்கு மிகவும் சிறப்பு அடக்கம் உடைமை என்ற ஓர் அதிகாரம் அமைத்துள்ளார்.

கல்வி, புகழ், கொடை, தறுகண் முதலியவற்றால் ஒருவனுக்குப் பெருமித உணர்வு உண்டாகும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. அதனால் ஒருவன் அடக்கத்துடன் இருப்பது என்பது மிக மிக அவசியமாகிறது.

'அந்த அடக்கம் அமரருள் உய்க்கும்' என்றும், அவன் தோற்றம் 'மலையினும் மாணாப் பெரிது' என்கிறார்.

"கதம் காத்து கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து" (குறள்-130)

எத்துணைதான் முயன்று கற்ற கல்வியறிவைப் பெற்ற ஒருவனாயினும் உலகியலோடு ஒத்து நடத்தலே அவன் கல்விக்குப் பெருமை. இல்லையேல் பெற்ற அறிவாலும் பெருமை இல்லை. அவனைக் கல்லாதவனாக உலகோர் எண்ணுவர் என்று கூறுகிறார்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" (குறள்-140)

அறிவுடையோர் என்பவர் பொருளை மிக விரும்பி பிறரிடம் விரும்பத்தகாத முறையில் பொருளைச் சேர்க்க விரும்பினால் அவர்கள் பெற்ற பொருளால் என்ன பயன் உண்டாகும்? என்று கேட்டு உலகம் விரும்பும் நல்லற வழியிலேயே ஒருவன் பொருளைச் சேர்க்க வேண்டும் அதுவே சிறப்பு என்று எடுத்துக் கூறுகிறார்.

அத்தகைய அறம் அறிந்து, பிறர் பொருளை மிக விரும்பா அறிவுடையவர்களே, தான் சேர வேண்டிய இடம் என்று செல்வமானது தானே அவர்களிடம் போய் சேரும். மேலும் சொற்களின் அருமையான பயனை ஆராய்ந்து பார்க்கும் அறிவுடையார் எப்போதும் பெரும் பயன் விளைக்காத சொற்களைப் பேச விரும்பமாட்டார்கள்.

அவ்வாறு பேசாதிருத்தலே பேரறிவு பெற்றவர்க்கும் பெருமையாகும் என்று உணரச் செய்கிறார்.

“அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்” (குறள்-198)

அறிவுடையவர்கள் செய்யும் அறிவார்ந்த செயல்களுள் எல்லாம் முதன்மையானது பகைவர்க்கும் தீமையை செய்யாமல் விட்டொழித்தலே என்று கூறுவதால் அறிவுடையாரின் செயல்கள் யாவற்றிலும் முதன்மையாக எண்ணப்படுவது பகைவர்க்கும் தீயனவற்றை செய்யாமல் இருத்தலே ஆகும்.

“அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்” (குறள்-203)

‘செல்வத்துள் பயனே ஈதல்’ என்ற கொள்கையை ‘ஒப்புரவு அறிதல்’ என்ற அதிகாரத்துள் எடுத்துக் கூறுகிறார். ஊர் நடுவிலுள்ள கிணற்று நீர் போல சிறந்த அறிவுடையவரின் செல்வம் அனைவர்க்கும் பயன் தரும் என்கிறார்.

திருவள்ளுவர் ‘தரும்’ என்று சொல்லுவதால் அவ்வாறு தரும் செல்வமே பயனுடையது என்றும், தன் செல்வத்தால் அத்தகைய பயனுடைய செயல்களைச் செய்பவனே பேரறிவாளன் என்றும் கொள்ளலாம்.

“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு” (குறள்-215)

சிறந்த அறிவுடையவர்களே பிறருக்குக் கொடுப்பதனால் தன் செல்வம் குறைவதையும், புகழ் வளர்வதையும் அறிந்து அத்தகைய அறச்செயல்களைச் செய்து அதனால் வரும் கேட்டினையும் ஏற்றுக் கொள்வர். அதனால் புகழுடம்பை வாழ விட்டு பொய்யுடல் நீக்கும் பெருமையும் அவ்வறிவுடையோர்க்கே அல்லாமல் பிறருக்கு வாய்க்காது என்கிறார்.

“நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது” (குறள்-235)

அறிவுடையார் அளவு அறிந்து, ஆன்ற செயலறிந்து செயலாற்றும் திறம் பெற்றவராவார். அவர்களின் அறிவுத்திறத்தால் மனது எப்போதும் அறவழிகளையும், அறம் செய்யும் ஆசையினையும் பெற்று இருக்கும் என்று கூறுகிறார்.

“அளவறிந்தார் நெஞ்சத்தறம் போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு” (குறள்-288)

‘வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்ற வள்ளலாரின் மனநிலையை நன்கு கற்றறிந்த அறிவினர் பெறுவர்? அப்படிப்பட்ட மனநிலையைப் பெறாதவர் அறிவினால் பிறருக்கும், அவருக்கும் நன்மைகள் ஏற்படுவதுண்டோ? இல்லை என்று கூறுகிறார். கற்றவனானால் தன் அறிவுத்திறத்தால் உய்த்துணர்ந்து பிறர் துன்பம் தெரிந்து, அந்நிலை தனக்கு வந்தால் என்ன செய்வோம் என்று எண்ணி யோசித்து செயல்பட வேண்டும்.

“அறிவினான் ஆகுவது உண்டோ? பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை” (குறள்-315)

ஒருவன் யார் யாரிடமிருந்து எப்படிப்பட்ட பொருளைக் கேட்டாலும் அதன் உண்மைப் பொருளைத்தேடி அலைந்து உணர்ந்து கற்றலே சிறந்த அறிவாகும். அப்பொருட்களின் புறத்தழகில் மனம் ஈடுபட்டு மனம் அழியாமல் அல்லது மயங்காமல் மெய் உணர்தல் சிறப்பாகும் என்று சொல்கிறார். கற்று உண்மைப் பொருளை உணர்ந்தவர் மீண்டும் பிறவாத நன்னெறிகளில் செல்ல விரும்புவர்.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்-355)

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி" (குறள்-306)

மெய்ப்பொருளை உணரவும், நன்னெறியில் நல்லறம் செய்வதற்கும் நூல்களைக் கற்ற அறிவால் வந்து விடாது எத்தணை நூல்கள் கற்றவராயினும், அவரவர் உண்மை அறிவே மிகும் என்கிறார். அதவாது அவனுக்கு அவனுடைய விதிவழி வந்த அறிவின் வழியே தான் அவன் செயல் நிற்கும் என்றும் கூறுகிறார்.

"செவிக்குணவு இல்லாத பொழுது சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" (குறள் 412)

"செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்" (குறள் 413)

என்று ஆத்திரப்படுகிறார். கல்லாத ஒருவன் இறந்தாலும் வாழ்ந்தாலும் ஒரு பயனும் இல்லை என்று வெறுக்கிறார். அதனாலேயே கல்வியின் பின் கல்லாமை என்ற அதிகாரம் அமைத்துள்ளார். கல்வியின் உயர்வும், கல்லாரின் இழிவையும் இணைத்தே கூறி எடுத்துக் காட்டுகிறார்.

கல்லாதவரின் இழிவை மிக மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

கல்லாதவன் அழகு மிக நன்றாயினும், அதனை அறிவுடையார் ஒரு பொருட்டாக எண்ண மாட்டார்.

கல்வியறிவு இல்லாத ஒருவன் ஓர் அவையில் தலைமை ஏற்றுப் பேச அவன் சொல்லாமல் சோர்வு உண்டாகும். மேலும் விளைச்சலுக்குப் பயன்படாதார் நிலம் போல் ஒரு பயனும் இன்றி இருப்பான்.

நுட்பமான அறிவற்றவன் அழகு, மண்ணால் செய்யப் பெற்ற பொம்மை போலாகும் என்கிறார்.

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்" (குறள்-404)

"கல்லா ஒருவன் தகைகமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்" (குறள் 405)

"உணர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவா
களரனையர் கல்லா தவர்" (குறள்-406)

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மான் புனைபாவை அற்று" (குறள்-407)

என்று குறள் கூறுகிறது.

கல்வியறிவு இல்லா ஒருவன் ஒன்றைச் சொல்ல முற்படுதல் அரங்கின்றி சூதாட்டக் காயை உருட்டி ஆடுவதைப் போலாகும் என்றும், கல்லாத ஒருவன் தலைமையேற்று சொல்லாட முனைந்தால் அவன் பேச்சால் அவன் அறியாமை வெளிப்படும் என்றும் கூறிய திருவள்ளுவர் இறுதியில் உறுதியாக விலங்களோடு ஒப்பானவர் கல்லாதவர் என்று கூறுவதிலிருந்து, கல்லாமையை எந்தளவிற்கு வெறுக்கிறார் என்பது விளங்கும்.

"அரங்கின்றி வட்டாடி யற்றே; நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்" (குறள்-401)

"கல்லா ஒருவன் தகைமை தலைசெய்து
சொல்லாடச் சோர்வு படும்" (குறள்-405)

"விலங்கொடு மக்கள் அனையர்; இலங்குநூல்
கற்றாரோடு ஏனைய யவர்" (குறள்-416)

திருவள்ளுவர் 'கல்வீ, 'கல்லாமை' என்ற அதிகாரங்களை அடுத்து கேள்வி என்னும் அதிகாரம் அமைத்துள்ளார். இதன் நுட்பத்தை நாம் உணர வேண்டும். காரணம் கல்வி கடல் போன்றது. கற்பவரின் வாழ்நாட்களோ மிகக் குறைவு. ஒருவன் எவ்வளவு முயன்று கற்றாலும் முற்றும் உணர இயலாது. அதனால் மற்றவர் கூறும் மொழிகளாலும் அவனுக்கு அறிவுத் தெளிந்து பெருகும் என்ற எண்ணத்திலேயே கல்லாமைக்குப் பின் கேள்வி அதிகாரம் அமைத்துள்ளார்.

"முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதுங்
கற்றனம் என்று களியற்க"

என்று நீதி நெறி விளக்கப் பாடலும்,

'ஒருவன் கணனடங்கக் கற்றானும் இல்' என்ற சிறுபஞ்சமூல பாடல்வரியும்,

'கல்வி கரையில கற்பவர் நான் சில மெல்ல நினைக்கின் பிணிபல' என்று நாலடியாரும்,

'கல்வியென்னும் பல்கடல்' என்ற திருவாசக வரியும்,

"கற்றதுகைம் மண்ணளவு கல்லாத துலகளவேன்
நுற்ற கலைமடந்தை ஒதுகின்றாள் - மெத்த
வெறும்பந்த யங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையில்எண் சாண்"

என்ற ஔவையின் தனிப்பாடலாலும் ஒருவன் முற்றக் கற்றுணர்தல் இயலாது என்பது உணர இயலும். அதனால் தான் 'செல்வங்களுள் செல்வம் செவிச் செல்வம்' என்றும் 'செவிக்குணவு இல்லாத போழ்து' வயிற்றுக்கு உணவு சிறிதே வேண்டும் என்றும் கேள்வியின் செவியுணவை உடையவர் விண்ணுலகில் உள்ள அவியுணவினை உடைய தேவர்க்கு ஒப்பாவார் என்கிறார்.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" (குறள்-411)

"செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்" (குறள்-412)

"செவிஉணவிற் கேள்வி யுடையார் அவிவுணவில்

ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து" (குறள்-413)

கல்வியின் முக்கியத்துவத்தை முற்றும் உரைத்த திருவள்ளுவரோ, ஒருவன் கற்கா விட்டாலும், கற்றவர் கூறும் நன்னெறிகளைக் கேட்க வேண்டும். அ∴து அவர்களுக்கு வழுக்கும் சேற்று நிலத்தில் நடக்க உதவும் ஊன்றுகோல் போல் உதவும் என்று கேள்வியின் சிறப்பை உணர்த்துகிறார்.

"கற்றலின் ஆயினும் கேட்க! அ∴தொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை" (குறள்-414)

"இழுக்கல் உடையழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்" (குறள்-415)

"எனைத்தானும் நல்லவை கேட்க! அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்" (குறள்-416)

என்றும் கூறுகிறார்.

இதிலிருந்து ஒருவன் எவ்வளவு தான் முயன்று கற்றாலும், கற்காவிட்டாலும் கற்று தேர்ந்து தெளிந்து உணர்த்தும் அறிவுடையாரின் வாய்மொழியைக் கேட்க வேண்டும் என்கிறார். இவ்வதிகார இறுதியிலும் செவிச்சுவைப் பெறா வாயுணர்வின் மாக்கள் வாழ்ந்தாலும் அழிந்தாலும் என்ன? என்று ஆத்திரப்பட்டு கேட்கிறார்.

வள்ளுவரின் வாய் மொழியிலிருந்து அவர் கல்லாதவரையும், கற்றவரின் நல்லுரைகளைக் கேளாதவரையும் மக்கள் என்றே ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களைத் திருவள்ளுவர் 'விலங்கு' மாக்கள்' என்ற சொற்களால் சுட்டுவதாலேயயே நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறது.

'செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?" (குறள்-420)

"மாவும் மாக்களும் ஐயறி வினவே
மக்கள் தாமே ஆறறிவுயிரே!"

என்று தொல்காப்பியமும் கூறுகிறது.

"கேள்வியும் கல்வியாகும்" என்று திவாகர நிகண்டும், "கற்றல் கேட்டல் உடையின் பெரியார்" என்று தேவாரமும், "கற்றலின் கேட்டலே நன்று" என்ற பழமொழியும் வள்ளுவர் வாய்மொழியும் வழி மொழிகின்றன எனலாம். "பிடித்த கல்விப் பெரும்புணை" என்று மணிமேகலை கூறுகிறது. "துணையாய் வரும் தூயநற் கல்வியே" என்னும் திருமந்திர பாடலாலும் கல்வியின் பெருமையை உணரலாம். அதனால் அத்தகைய கல்வியைத் தாமே கற்றும், கற்றவர் கேள்வியாலும் பெறலாம் என்கிறார் திருவள்ளுவர். இத்தகைய கல்வி கேள்விகளால் பெறும் அறிவின் திறன் உணர்ந்த கேள்விக்கு அடுத்து அறிவுடைமை இருந்து அவ்வறியே காப்பாற்றும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

சென்ற இடத்தில் செலவிட குறையாது, மாறாக வளர்ந்து தீமையிலிருந்து விலக்கி, நல்லனவற்றை காட்டுவதும் அறிவாகும். அதனால் ஒருவன் யார் எதைப்பற்றிக் கூறக் கேட்டாலும் அதன் உண்மைப்பொருளை ஆராய்ந்து அறிவதே உண்மை அறிவாகும். உலகில் உள்ளவர்களை எல்லாம் நட்பாக்குவது அறிவாகும். விரிவதும் சுருங்குவதும் இல்லாமல் இருப்பதும் அறிவே ஆகும். அதாவது ஒருநாள் அறிவுடை ஒருவன். மறுநாள் அவ்வறிவற்றுப் போவது என்பது இல்லை என்றும் அறிவுடையார் ஒரே நிலைப்பாடு உடையவர்களாகவே இருப்பர்.

"அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்" (குறள்-421)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்-423)

"உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு" (குறள்-425)

அறிவுடையார் தனக்கு வரப்போகும் நன்மை தீமைகளை முன்பே உணர்ந்து அறிய இயலாதவராவர்.

அறிவுடையாரும் அஞ்ச வேண்டிய செயல்களுக்கு அஞ்சவேண்டும் அதுவே அறிவுடையாகும். அஞ்ச வேண்டாத செயல்களுக்கு அஞ்சி நடுங்குவது பேதமையாகும். தனக்கு நேரப் போகும துன்பங்களை வராமல் காக்கும் அறிவுடையோர்க்கு அவர்கள் அஞ்சி நடுங்கும் துன்பம் என்பதுவும் இல்லை. அறிவுடையார் எல்லாம் உடையவர் என்கிறார். அறிவின் திறத்தால் இவ்வுலகில் பெற இயலாத எதுவும் இல்லை. ஒருவேளை அவர்கள் அறிவைத் தவிர மற்ற செல்வம் பெறாது இருப்பினும் அவ்வறிவொன்றே போதும் என்றும அறிவற்றோர் மற்ற செல்வம் எல்லாம் பெற்று இருந்தாலும் எதுவும் இல்லாதவராகவே கொள்ளப்படுவார் என்கிறார்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்" (குறள் 430)

திருவள்ளுவர் 'கல்வி', 'கல்லாமை', கேள்வி அறிவுடைமை என்ற அதிகாரங்களை நிரல்பட வைத்து இவ்வுலகில் மக்களாகப் பிறந்த ஒருவன் கல்வி, கற்று, கற்றவர் கூறக்கேட்டு, அறிவுடையவனாக இருத்தலால் எல்லாம் பெற்றவனாவான். அறிவற்றனை ஒரு பொருட்டாக எண்ணவில்லை வள்ளுவர்.

"அறிவை அறிவது அருளிய பெருமாளே" என்று கந்தரனுபூதியும்,
"அறிவை அறிவதுவே ஆகுபொருளென
உறுதி சொன்ன உண்மையினை யோரும்நாள் எந்நாளே?"

எனத் தாயுமன சுவாமிகளும் அறிவை அறிய வைத்த இறைவனைப் போற்றுகின்றனர்.

ஒவ்வொருவரும் கல்வி கற்று, அக்கல்வியின் பயனாய் உறுதிப் பொருளாம் இறையைக் கண்டறிந்து, அவ்விறையோடு கலத்தலே உண்மை அறிவின் பயனாகும். அதனால் தான் 'இரை தேடுவதோடு இறையும் தேடு' என்ற தொடர் உருவானதோ என்று எண்ணத் தூண்டுகிறது.

பதவி, பணம், புகழ் இவை பெறுவதற்கு மட்டும் அல்ல கல்வி அவற்றின் மேலான மெய்ஞ்ஞானம் பெறவே கல்வி என்ற உண்மை உணர்ந்து உலகோர் உயர்கல்வி பெற விழைய வேண்டும்.

ஆனால் அரிய நூல்களைக் கற்ற குற்றமில்லாதவரிடத்தும், ஆராய்ந்து பார்த்தால் சில குறைபாடுகள் இருக்கவே செய்யும் என்கிறார்.

"அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு" (குறள்-503)

ஒருவன் தன் உள்ளத்தின் ஊக்கத்துக்கு ஏற்பவே உயர்வினைப் பெறுவான் ஊக்கம் உடைய ஒருவனிடம் ஆக்கம் தானே வழிகேட்டுக் கொண்டு செல்லும் என்று

கூறுகிறார். அதனால் ஒவ்வொருவரும் கல்வியைப் பெற ஊக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். இன்றும் வேறு வேறு உடல் குறைபாடு உடையவர்களும் உள்ளத்தின் ஊக்க மிகுதியால் பல சாதனைகளைச் செய்து ஊனம் ஒரு குறையே இல்லை என்று உறுதிப்படுத்துகின்றனர். வெள்ளம் போல் பெருகி வரும் துன்பங்களை எல்லாம் அறிவுடையயோர் உறுதியுடன் அதைப் போக்க நினைக்கும் போதே அது கெடும் என்கிறார்.

"வெள்ளத்து அணைய இடும்பபை அறிவுடையார்
உள்ளத்தின் உள்ளக் கெடும்" (குறள்-622)

இயற்கையான அறிவும், நூல்களைக் கற்று பெற்று அறிவும் உடையவர்களுக்கு இவ்வுலகில் எந்தச் சூழ்ச்சியும் முன் நிற்காது என்று கூறுகிறார்.

"மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுற முன்நிற் பவை" (குறள்-636)

'தூது' அதிகாரத்திலும் திருவள்ளுவர் அறிவின் திறத்தைப் பலவாறு பேசுகிறார். அறிவு உடையோரே அத்தூது செல்லத் தகுதியுடையவர் என்று கூறுகிறார்.

"கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பார் தலை" (குறள்-687)

"அறிவுரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு" (குறள்-684)

என்ற குறட்பாவில் அறிவை முதன்மையான தகுதியாக அறிவைத் தூது செல்பவனுக்குக் கூறுகிறார்.

'அரிய கற்று அறிவு மிகக் கொண்டாரும் அதனை பிறருக்கு எடுத்துச் சொல்லும் திறம்பெற்றிருத்தல் வேண்டும், தன்னைப் போல் கற்றவரின் முன்னிலையில் எடுத்துக் கூறி அவர்களிலும் தன்னை மிக்கவனாக உயர்த்திக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட திறம் இல்லாதவர் கற்றும் கல்லாதவராக எண்ணப்படுவார் என்றும் பேடி கைவாள் போன்றது அவன் கற்ற கல்வி எனவும் கூறுகிறார். கற்று அறிவுடைய ஒருவன் பிறருக்கு எடுத்துச் சொல்லும் திறம் உடையவனாகத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போது பொன்மலர் நாற்றம் பெற்றது போலாகும். இல்லையேல் அவர் கற்ற கல்வியினால் யாருக்கும் எவ்விதப் பயனுமில்லையாதலால் கற்றும் கல்லாதவனாவான். கற்றார் அவையில் எடுத்துரைக்க வல்லவனே கற்றாருள் கற்றவன் ஆவான் என்றும் கூறுகிறார் வள்ளுவர்.

"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்" (குறள்-722)

"கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்" (குறள்-724)

"பகையிடத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்பவன் கற்ற நூல்"

"கல்லா தவரின் கடையென்ப கற்றுஅறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு வார்" (குறள்-729)

அதனால் ஒருவன் கற்றாலும் கற்றவர் அவையில் சொல்லாடும் திறனும் பெற்றிருத்தல் மிகவும் அவசியம் என்று அறிவுறுத்துகிறார். அறிவின்மை என்பது ஒருவனுக்கு எல்லா இல்லாமைக் கொடுமைகளுள் மிகப் பெரிய கொடுமையாகும். மற்ற இல்லாமைகளைப் பெரிதாக உலகம் மதிக்காது.

அறிவிலாத் தன்மை என்பது தனக்குத் தானே செய்து கொள்ளும் மிகப் பெரிய கொடுமையாகும். அதைத்தவிர அதாவது அறிவற்றிருப்பதை விட பிறர் செய்யும் தீமை எதுவும் பெரிதல்ல என்றும் கூறுகிறார்.

"அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு" (குறள்-841)

"அறிவிலான் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது" (குறள்-843)

வீரத்தில் சிறந்தவர்களிடம் பகை கொண்டாலும், கற்றாரின் பகையை ஒருவன் எப்போதும் கொள்ளக் கூடாது என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை" (குறள்-832)

அறிவின் ஆக்கம், அறிவிலா விடில் ஏற்படும் இன்னல் பற்றி எடுத்துக் கூறிய வள்ளுவர் அறிவின் பெருமையின் உச்சத்தை உறுதிபடப் பேசுகிறார்.

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டில்
நீள்வினையால் நீளும் குடி"

என்கிறார். ஒருவனின் அறிவுத் திறத்தால் இவ்வுலகத்திற்கு செய்யும் நல்வினையால் இவ்வுலகம் முன்னேறும் அதனால் தனக்கும் இவ்வுலகுக்கும் நன்மை பயக்கும் அறிவினைப் பெறக் கற்க வேண்டும், கற்றோர் மொழிகளைப் பொன் போல் போற்றி கேட்க வேண்டும் என்கிறார். அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும். ஆகில உலகமும் விரும்பும் என்பதில் ஐயமில்லை.

திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகள் தனிமனிதக் கல்வி, குடும்பக் கல்வி, சமுதாயக் கல்வி, கல்லாதாரின் கல்வி, ஆன்மநேயக் கல்வி என்று வகைப்படுத்தலாம். தனிமனிதன் கல்வியைக் கண்ணாகப் போற்றி கற்க வேண்டும். ஒரு சமுதாய வளர்ச்சி அதன் அறிவு வளர்ச்சிக்கேற்பவே அமைகிறது. சமுதாயம் அறிவு வளர்ச்சியும் விழிப்புணர்வும் பெற கல்வி அவசியம் ஆகிறது. ஆதனால் கல்வியை ஒருவன் தெளிந்து தேர்ந்து கற்க வேண்டியனவற்றை அறிந்து கற்க வேண்டும். கற்றபின் அதன் பின் வழி நடக்க முற்பட வேண்டும். பொருளுடையார் முன் இல்லார் போல் பணிவுடன் இருந்து கற்றல் சிறப்பானது. சாகும் வரை கற்க வேண்டும். கற்ற உறுதிப் பொருளைக் கற்றார் முன் எடுத்துரைக்க வல்லவனாக இருத்தல் வேண்டும். கற்றவன் பயன் தரா சொற்களையும், தீய செயல்களையும் செய்தல் கூடாது. மருத்துவம் பற்றியும் அறிதல் வேண்டும். 'உணவே மருந்து', மருந்தே உணவு என்ற நிலையில் மிகினும் குறையினம் நோய் செய்யும் எனவுணர்ந்து அற்றது அறிந்து உண்ணப் பழக வேண்டும். பொறாமை, பேராசை போன்ற குணங்களைக் கற்றவன் கைவிடுதல் சிறப்பாகும். மனமாசகற்றி, தன்னுயிர்க்கும், மன்னுயிர்க்கும் நன்மையை நாட வேண்டும்.

பழிச்சொல்லுக்கு ஆளாகாத பண்புடை மக்களைப் பெற்று, இயல்புடை மூவராகிய தாய், தந்தை, மனைவி மூவரையும், காப்பதோடு பற்றற்ற துறவி, வறியவர், குடும்பத்தை விட்டு வெளியேறி இருந்து வாழ்பவர் ஆகியோரையும் காத்தல் ஆண்மகன் கடமை என்கிறார். குடும்பத் தலைவியோ, தற்காத்து, தன்னைக் கொண்டானைக்

காத்து, தம் மக்களுக்கு நற்பண்பும், கல்விகேள்விகளை வழங்கி, நல்லவற்றின் வழி நடத்தி நன்றாற்ற வேண்டும். பெற்றோர் இருவரும் நல்லறிவால் நல்வழி நடந்து, பிள்ளைகளையும் நல்லாற்றுப் படுத்துதல் சிறப்பாகும் என்று குடும்பத்தார்க்குக் கூறுகிறார்.

சமுதாயத்தில், அமைச்சர், தூதர், உழவர், மருத்துவர் என்று அனைவருக்கும் கல்வி அவசியம் என்றுணர்த்தும் வள்ளுவர் 'செய்க பொருளை' என்றும் அறிவுறுத்துகிறார்.

கல்லாதாரின் கல்வி கற்றோரின் அறிவுரைகளால் பெறலாம் என்கிறார். எந்தளவிற்கு ஒருவன் நல்லவனவற்றைக் கேட்க இயலுமோ அந்தளவிற்கு கற்றோரின் வாய்மொழிகளைக் கேட்க என்று அறிவுறுத்தும் வகையில் "கற்றலின் ஆயினும் கேட்க" என்கிறார்.

மேலும் எத்தனை சிறந்த கல்வியறிவுடையோனாயினும், தான் கற்ற கல்வி வாயிலாக நல்ல பண்புகளைப் பெற்று, தானும் பிறரும் சிறக்கும் வினையாற்றலே மிகவும் சிறப்பாகும் என்கிறார். கல்வியும், கேள்வியும் கொண்ட மேலோர் மேன்மை மிக்க பண்பு நலன் உடையவர்களாக விளங்க வேண்டுமென மொழிகிறார். படிப்பு என்பது இன்றைய நடைமுறை போல் வெறும் வேலை வாய்ப்புத் தகுதியெனத் திருவள்ளுவர் கருதவில்லை. மனிதனை முழுமையாக்கும் ஒரு சிறந்த வழியாக அல்லது ஆயுதமாக கல்வியையும் அறிவையும் கருதுகிறார் வள்ளுவர். தொடக்கம் முதல் இறுதி வரை வள்ளுவரின் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலின் வழி முழுமைபடுத்திக் கொள்ள விரும்பும் யாருக்கும் கல்வியறிவும், கேள்வியறிவும், பட்டறிவும் அவசியம் என்பது புலனாகிறது. வள்ளுவர் வகுத்துள்ள கல்விக் கொள்கை மிக உயர்வானது. இன்றைய கொள்கையில் இருந்து முற்றிலும் மாறானது. வாழ்நாள் முழுமையும் கற்கத் தூண்டுவது. வாழ்க்கைப் பயணத்தில் முக்கியத் துணையாகவும், தகுதியாகவும், சிறப்பாகவும், புகழாகவும் உருவங்கொள்வது. கல்லாதாரும் கேள்வியாலாவது அறிவைப் பெற வேண்டும் என்கிறார். அனைத்து மக்களும் அறிவுத் தெளிவு உடையவர்களாக விளங்கி, நற்பண்பு உடையவர்களாக விளங்க வேண்டும் என்பதே வள்ளுவரின் கல்விக் கோட்பாடாக அமைகிறது. கல்வி மனிதனை மனிதப் பண்புகளால் முழுமை ஆக்க வேண்டும் என்றே வள்ளுவர் ஆசைப்படுகிறார். அதனால் தான் 'கற்பவை' என்றும் 'நிற்க அதற்குத் தக' என்றும் சொற்கள் அமைத்துள்ளார். ஏட்டுச் சுரைக்காயாக கல்வி அமையாமல் வாழ்க்கைக்கு வழி காட்டும் ஒன்றாகவும் வழுக்கலில் ஊன்று கோளாகவும் அமைய வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார். அவரது அடிச்சுவட்டில் இன்றைய கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட்டால் நல்ல மனிதர்களை உருவாக்கலாம்.

சிறந்த கல்வியளார்கள் நிறைந்து இருந்தாலும், மனிதப் பண்பு மிகுந்த கல்வியாளர்கள் உருவாக வள்ளுவர் வகுத்த கல்விக் கொள்கையே வழி காட்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இன்றைய நிலையில் திருவள்ளுவரின் கல்விக் கோட்பாடுகள் உலகம் முழுவதும் கற்க வேண்டிய ஒன்றாகும். வள்ளுவரின் கல்விக் கொள்கைகளைக் கற்று, கற்பித்து சிறப்புறுவோம்!

வாழ்க வள்ளுவம்!　　　　　　வாழ்க செந்தமிழ்!